**மாத்தளை மாநகர சபை - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 பாதகமான அபிப்பிராயம்

மாத்தளை மாநகர சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த வருமானச் செலவினக் கணக்கு, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் (252 அதிகாரம்) 219 ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

எனது அறிக்கையின் பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படைக்கான பந்தியில் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நுவரெலியா மாநகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் பாதகமான அபிப்பிராயமொன்ற வழங்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

மாநகர சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் மாநகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.
என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது மாநகர சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மாநகர சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் எனது அறிக்கையின் 1.6.1 (கெ) மற்றும் (கே) பந்தியின் அவதானிப்புக்கள் தவிர முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் உள்நாட்டு கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்கு செலுத்தப்பட்ட ரூபா 542,396 ஆன கடன் தவணைப் பணம் கடன் மூலதனக் கணக்கிற்கு வரவு வைக்கப்படாமல் கடன்வட்டிக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டில் நாட்குறிப்பு பதிவு மூலம் சீராக்கம் செய்கின்றேன். | கணக்கு மீதிகள் சீராக்கம் செய்யப்பட வேண்டும். |
| (ஆ) மீளாய்வாண்டின் இறுதி திகதியில் முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 32,015,580 ஆக இருந்த போதும் அது ரூபா 25,524,210 என ரூபா 6,491,370 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டில் நாட்குறிப்பு பதிவு மூலம் சீராக்கம் செய்கின்றேன். | கணக்கு மீதிகள் சீராக்கம் செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு 63 நிலையான வைப்புச் சான்றிதழ்களுக்குரிய மீதி ரூபா 222,902,083 ஆக இருந்த போதும் அது ரூபா 217,050,495 என ரூபா 5,851,588 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டில் நாட்குறிப்பு பதிவு மூலம் சீராக்கம் செய்கின்றேன். | கணக்கு மீதிகள் சீராக்கம் செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டிற்குரிய நிலையான வைப்பு வட்டி வருமானம் மற்றும் பெறவேண்டிய வட்டி வருமானம் முறையே ரூபா 20,800,472 மற்றும் ரூபா 5,523,143 ஆக இருந்த போதும் அது ரூபா 19,703,644 மற்றும் ரூபா 3,548,360 என முறையே ரூபா 1,096,828 மற்றும் ரூபா 1,974,783 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டில் நாட்குறிப்பு பதிவு மூலம் சீராக்கம் செய்கின்றேன். | கணக்கு மீதிகள் சீராக்கம் செய்யப்பட வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டில் கிடைத்திருந்த முன்னைய ஆண்டிற்குரிய நிலுவை அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் ரூபா 505,000 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டில் நாட்குறிப்பு பதிவு மூலம் சீராக்கம் செய்கின்றேன். | கணக்கு மீதிகள் சீராக்கம் செய்யப்பட வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டிற்குரிய பெறவேண்டிய விளம்பர பதாதை கட்டணங்கள் ரூபா 922,425 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை | 2021 ஆம் ஆண்டில் நாட்குறிப்பு பதிவு மூலம் சீராக்கம் செய்கின்றேன். | கணக்கு மீதிகள் சீராக்கம் செய்யப்பட வேண்டும். |
| (எ) | மீளாய்வாண்டில் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் திணைக்களத்திற்கு அனுப்ப வேண்டிய ரூபா 201,969 ஆன முத்திரை வரி ரூபா 22,816 என ரூபா 179,153 குறைத்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக் கப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டில் நாட்குறிப்பு பதிவு மூலம் சீராக்கம் செய்கின்றேன். | கணக்கு மீதிகள் சீராக்கம் செய்யப்பட வேண்டும். |
| (ஏ) | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 353,643 ஆன ஊழியர் பிணை | 2021 ஆம் ஆண்டில் நாட்குறிப்பு பதிவு மூலம் சீராக்கம் செய்கின்றேன். | கணக்கு மீதிகள் சீராக்கம் செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வைப்புத் தொகை ரூபா 136,990 என ரூபா 216,653 குறைத்து நிதிக் கூற்றுக்களில் காண்பிக் கப்பட்டிருந்தது. | | |
| (ஐ) | முன்னைய ஆண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் சுட்டிக் காண்பிக்கப்பட்ட அவ்வாண்டில் கணக்கீடு செய்யப்படாத ரூபா 6,405,000 ஆன பெறவேண்டிய முத்திரைக் கட்டண வருமானத்தை மீளாய்வாண்டில் கணக்குகளில் சீராக்குவதற்காக ரூபா 60,405,500 என தவறாக வேறு வருமானக் கட்டுப்பாட்டுக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டு திரண்ட நிதிக்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. பின்னர் மீளாய்வாண்டின் போது கிடைத்த முத்திரைக் கட்டணங்களில் ரூபா 6,146,700 தொகை ஏனைய வருமானக் கணக்கிற்கு செலவு வைக்காமல் தவறுடன் திரண்ட நிதி கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது | 2021 ஆம் ஆண்டில் நாட்குறிப்பு பதிவு மூலம் சீராக்கம் செய்கின்றேன். | கணக்கு மீதிகள் சீராக்கம் செய்யப்பட வேண்டும். |
| (ஒ) | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு கடன்கொடுத்தோர் மேற்கொண்ட மூன்று கட்டிட திருத்த வேலைகள் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்ட திகதியில் பூர்த்த செய்யாதிருக்கையில் அதில் ரூா 9,385,941 தொகை அதன் மதிப்பீட்டு பெறுமதியில் மூலதனமாக்கப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டில் நாட்குறிப்பு பதிவு மூலம் சீராக்கம் செய்கின்றேன். | கணக்கு மீதிகள் சீராக்கம் செய்யப்பட வேண்டும். |
| (ஓ) | அலுவிஹார வாசிப்பு மண்டப நிர்மாணத்திற்காக மீளாய்வாண்டில் செலவிடப்பட்டிருந்த ரூபா 3,065,769 மற்றும் மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா | 2021 ஆம் ஆண்டில் நாட்குறிப்பு பதிவு மூலம் சீராக்கம் செய்கின்றேன். | கணக்கு மீதிகள் சீராக்கம் செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 632,243 பெறுமதியான 9 நிலையான வைப்பு உருப்படிகள் மூலதன மாக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஔ) | மீளாய்வாண்டின் யூன் முதல் திசெம்பர் வரை பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 4,224,058 தொகை அவ்வாண்டில் கணக்கீடு செய்யப்படாத தவறினை திருத்தம் செய்வதற்காக மீளாய்வாண்டின் போது அது ரூபா 2,245,685 என பெறவேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 1,978,373 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டில் நாட்குறிப்பு பதிவு மூலம் சீராக்கம் செய்கின்றேன். | கணக்கு மீதிகள் சீராக்கம் செய்யப்பட வேண்டும். |
| (ஃ) | 03 செயற்திட்டங்களுக்காக பெறவேண்டிய ரூபா 3,253,157 தொகை ரூபா 3,400,000 என கடன்பட்டோராக பதிவுசெய்யப்பட்டமை காரணமாக கடன்பட்டோர் ரூபா 146,843 கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது, இந்த 03 செயற்திட்டங்களுக்காக ஒப்பந்தக்காரர்களுபக்கு செலுத்த வேண்டிய ரூபா 3,253,157 தொகை கடன்கொடுத்தோரின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டில் நாட்குறிப்பு பதிவு மூலம் சீராக்கம் செய்கின்றேன். | கணக்கு மீதிகள் சீராக்கம் செய்யப்பட வேண்டும். |
| (க்) | 07 செயற்திட்டங்களுக்காக முன்னைய ஆண்டுகளில் கடன்பட்டோராக வைக்கப்பட்டிருந்த ரூபா 650,752 தொகை மீளாய்வாண்டு அளவில் தீர்வுசெய்யப்பட்டிருந்த போதும் மேலும் கடன்கொடுத்தோரின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டில் நாட்குறிப்பு பதிவு மூலம் சீராக்கம் செய்கின்றேன். | கணக்கு மீதிகள் சீராக்கம் செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (கா) | முன்னைய ஆண்டுகளில் 61 செயற்திட்டங்களுக்குரிய கடன்கொடுத்தோராக்கப்பட்ட ரூபா 10,517,811 தொகை மீளாய்வாண்டின் இறுதி திகதி அளவில் தீர்வு செய்யப்பட்டிருக்கையில் மேலும் அத்தொகை கடன்கொடுத்தோரின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டில் நாட்குறிப்பு பதிவு மூலம் சீராக்கம் செய்கின்றேன். | கணக்கு மீதிகள் சீராக்கம் செய்யப்பட வேண்டும். |
| (கி) | முன்னைய ஆண்டின் போது கடன்கொடுத்தோராக்கப்பட்டு நிர்மாணம் ஆரம்பிக்கப்படாத கைவிடப்பட்டிருந்த 03 செயற்திட்டங்களின் கிரயம் ரூபா 3,838,643 மேலும் அத்தொகை கடன்கொடுத்தோரின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டில் நாட்குறிப்பு பதிவு மூலம் சீராக்கம் செய்கின்றேன். | கணக்கு மீதிகள் சீராக்கம் செய்யப்பட வேண்டும். |
| (கீ) | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உடன்படிக்கை செய்யப்பட்டு நிர்மாணம் பூர்த்தி செய்யப்படாதிருந்த 26 செயற்திட்டங்களின் மொத்தக் கிரயம் ரூபா 32,647,154 தொகை ரூபா 38,489,885 எனக் கணக்கீடு செய்த காரணத்தினால் கடன்கொடுத்தோர் ரூபா 5,842,731 ஆல் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டில் நாட்குறிப்பு பதிவு மூலம் சீராக்கம் செய்கின்றேன். | கணக்கு மீதிகள் சீராக்கம் செய்யப்பட வேண்டும். |
| (கு) | வழியில் இருப்பு கணக்கொன்று அல்லது சீராக்கமொன்று இல்லாமல் ரூபா 19,123,258 நாட்குறிப்பு பதிவொன்று மூலம் வழங்கல் கொள்வனவுக் கணக்கு வரவு மற்றும் வழங்கல் கடன்கொடுத்தோர் கணக்கு செலவு என குறிப்பிடப்பட்டிருந்தது. பின்னர் ரூபா 19,123,258 தொகை வழங்கல் கடன்கொடுத்தோர் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்த போதும் வழங்கல் கொள்வனவு கணக்கு வரவு வைக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டில் நாட்குறிப்பு பதிவு மூலம் சீராக்கம் செய்கின்றேன். | கணக்கு மீதிகள் சீராக்கம் செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (கூ) | முன்னைய ஆண்டில் கடன்கொடுத்தோர் பதிவழிப்பதற்காக 13 ஆம் இலக்க நாட்குறிப்பு பதிவில் ரூபா 5,541,043 ஆல் வழங்கல் கடன்கொடுத்தோர் (கட்டுப்பாட்டுக்) கணக்கு வரவு மற்றும் வழங்கல் கடன்கொடுத்தோர் கணக்கு செலவு வைக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருந்த போதும் ரூபா 5,541,043 ஆல் வழங்கல் கடன்கொடுத்தோர் கணக்கு வரவு வைத்தல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டில் நாட்குறிப்பு பதிவு மூலம் சீராக்கம் செய்கின்றேன். | கணக்கு மீதிகள் சீராக்கம் செய்யப்பட வேண்டும். |
| (கெ) | முன்னைய ஆண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் சுட்டிக்காண்பித்த திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்க வேண்டிய ரூபா 16,673,586 வரவு வைத்தமை மற்றும் வரவு வைக்க வேண்டிய ரூபா 2,372,791 செலவாக வைக்கப்பட்ட தவறை திருத்தம் செய்வதற்காக மீளாய்வாண்டில் அப்பெறுமதியில் இரண்டு மடங்கான ரூபா 38,092,754 திரண்ட நிதியத்திற்கு வரவு மற்றும் செலவு வைத்தமை காரணமாக அத்தவறு திருத்தப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டில் நாட்குறிப்பு பதிவு மூலம் சீராக்கம் செய்கின்றேன். | கணக்கு மீதிகள் சீராக்கம் செய்யப்பட வேண்டும். |
| (கே) | முன்னைய ஆண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் சுட்டிக்காண்பித்த கணக்கீடு செய்யப்படாத ரூபா 1,157,690 ஆன கூட்டு கிரயமொன்று கணக்கீடு செய்வதற்காக மீளாய்வாண்டின் அப்பெறுமதி திரண்ட நிதியத்திற்கு வரவு மற்றும் செலவு வைத்தமையால் அத்தவறு திருத்தம் செய்யப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டில் நாட்குறிப்பு பதிவு மூலம் சீராக்கம் செய்கின்றேன். | கணக்கு மீதிகள் சீராக்கம் செய்யப்பட வேண்டும். |

### 1.6.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 06 கணக்கு விடயங்களுக்குரிய நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி ரூபா 3,932,509,777 ஆக இருந்த போதும் அதனோடொத்த மற்றும் அட்டவணைகளின் பெறுமதி ரூபா 3,904,241,962 ஆக இருந்தமையால் ரூபா 28,267,815 ஆன வேறுபாடு ஒன்று இருந்தது. | விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டு தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் 2021 ஆம் ஆண்டில் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | கணக்கு மீதிகள் சீராக்கம் செய்யப்பட வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 09 கணக்கு விடயங்களுக்குரிய மொத்தம் ரூபா 3,764,220,473 ஆன மீதி உறுதிப்படுத்தலுக்காக நிலையான சொத்துக்கள் பதிவேடு, கோவைகள் மற்றும் பதிவேடுகள் மற்றும் விரிவான அட்டவணைகள் சமர்ப்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது திருப்திகரமாக மெய்மையாய்வு செய்ய முடியாதிருந்தது. | விரிவான அட்டவணைகள் தயாரித்து விரைவில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுப்பேன். | கணக்காய்விற்கு தேவையான சகல சான்றுகளும் சமர்ப்பிக்கப்பட வேண்டும் |

### 1.7 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | பாராளுமன்ற சட்டங்கள் | | | |
| | மாநகர சபை கட்டளைச் சட்டம் (252) அதிகாரம் | | | |
| | (i)179(அ), (ஆ) | மாத்தளை நகரின் தனியார் வர்த்தக கட்டிட தொகுதியின் 60 ஆம் இலக்க கடையின் குத்தகையாளராக 2012 திசெம்பர் 31 ஆந் திகதி உடன்படிக்கை செய்யப்பட்டிருந்த ஒருவர் 2018 மார்ச் 09 ஆந் திகதிய | உறுப்பினராக வருவதற்கு முன்னர் உடன்படிக்கை கைச்சாத்திடல்களிலிருந்து விடுவிக்கப்பட வேண்டுமென சட்டத்தில் குறிப்பிடப்படாமையால் உடன்படிக்கையில் | மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 2061/42-05 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மூலம் மாத்தளை மாநகர சபையின் உறுப்பினர் ஒருவராக நியமனம் பெற்றிருந்தார். வ்வாறே அக் கடைக்காக மீளாய்வாண்டின் இறுதி திகதி அளவில் ரூபா 1,296,456 ஆன ஒரே தடவையில் செலுத்தும் தொகை மற்றும் ரூபா 3,488,945 ஆன தண்டப்பணம் தொகையொன்றும் அறவிடுதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. | குறிப்பிடப்பட்டதன பிரகாரம் வியாபார நடவடிக்கைகளிலிருந் து விலக முடியாது | |
| | (ii) 229(ஆ) பிரிவு | மீச்சந்தை வர்த்தக கட்டிட தொகுதியிலும் கொங்காவலை வர்த்தக கட்டிட தொகுதியிலும் நடாத்திச் செல்லப்படும் 210 சதுர அடி அளவிலான இரண்டு மாட்டிறைச்சி விற்பனை செய்யும் கடைகளை வருடாந்த கேள்வி மூலம் அல்லாமல் முன்னைய குத்தகையாளருக்கே மாதாந்த வாடகையை 10 சதவீதம் அதிகரிக்கப்பட்டு 2019 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரையில் 3 ஆண்டு களுக்காக வழங்கப்பட்டிருந்தது. | குத்தகையாளர்களை தெரிவுசெய்வது தொடர்பாக எதிர்வரும் நடவடிக்கை எடுப்பேன் | மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் ஏற்பாடுகளின் பிரகாரம் கேள்வி நடைமுறை பின்பற்றப்பட வேண்டும். |
| (ஆ) | 1989 சனவரி 20 ஆம் திகதிய 541/17 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட நிறைவேற்றப்பட்ட உப விதி -------------------------------- | | | |
| | XX ஆம் அத்தியாயத்தின் 9 ஆம் பந்தி | மாநகர சபையின் பொது சந்தைகளுக்கு வெளியே இடங்களில் மாட்டிறைச்சிக் கடை, 06 மீன் கடைகள் மற்றும் 24 கோழி இறைச்சிக் கடைகள் நடாத்திச் செல்வதாக | 2021 ஆம் ஆண்டில் அனுமதிப்பத்திரங்களை வழங்குவது தொடர்பாக கருத்திற் கொண்டு நடவடிக்கை எடுப்பதாக | உப விதிக்கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) இலங்கை சனநாயக் சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை<br>------------------------------- | | | |
| நிதிப்பிரமாணம் 396(ஈ) | வழங்கப்பட்ட போதும் கொடுப்பனவு கொடுப்பனவிற்கு சமர்ப்பிக்கப்படாத 6 மாதங்கள் கடந்த ரூபா 268,111 பெறுமதியான 14 காசோலைகள் தொடர்பாக நவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காசோலைகளின் திகதிகளை நீடிப்பதற்கும் காணாமல் போயிருந்தால் ஈடுசெய்யும் காசோலையொன்று வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) பொது நிர்வாக சுற்றறிக்கை<br>--------------------------------- | | | |
| 2008 யூன் 26 ஆந் திகதிய 13/2008 ஆம் இலக்க சுற்றறிக்கை மற்றும் அதற்குரிய திருத்தப்பட்ட 2019 யூன் 31 ஆந் திகதிய 13/2008(v) ஆம் இலக்க சுற்றறிக்கை | முன்னால் மாநகர ஆணையாளருக்கு மாதமொன்றுக்கு 140 லீற்றருக்கு ரூபா 14,560 ஆன எரிபொருள் படியொன்று வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறு இருக்கையில் 2020 சனவரி 01 முதல் யூன் 30 வரையான காப்பகுதியில் ஆணையாளின் பிரயாணத்திற்காக குழாம் வாகனங்களுக்காக அங்ககாரமின்றி 1921 லீற்றர் எரிபொருளுக்கு ரூபா 209,290 செலவிடப்பட்டிருந்தது | ஆகக்கூடிய எரிபொருள் எல்லை எல்லையை மிகைக்காத வகையில் வாகனத்தை ஓட்டத்தில் ஈடுபடுத்த வேண்டும். | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) ஏனைய சுற்றறிக்கை<br>------------------------------- | | | |
| (i) 2016 மார்ச் 17 ஆந் திகதிய 2016/03 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் சுற்றறிக்கையின் 5.1 ஆம் பந்தி | அரசின் விலை மதிப்பீட்டாளரிடமிருந்து மதிப்பீட்டு அறிக்கையொன்று பெற்றுக்கொள்ளாமல் மீச்சந்தை கட்டிட தொகுதியில் 15 கடைகள் வருடக் கணக்காக வாடகை அடிப்படையிலும் குத்தகை அடிப்படையிலும் வெளித்தரப்பினருக்கு கையளிக்கப்பட்டிருந்தது. | விலை மதிப்பீட்டு திணைக்களத்திடமிருந்து மதிப்பீட்டுப் பெறுமதி கிடைத்ததன் பின்னர் உரிய கேள்வி நடைமுறை பின்பற்றப்படும் . | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ii)1993 நவம்பர் 18 ஆந் திகதிய நகர அபிவிருத்தி அதிகாரபையின் | நகர அபிவிருத்தி அதிகாரசபைக்குரிய சபையில் காணப்படும் வங்கி கணக்கில் | நகர அபிவிருத்தி அதிகாரசபையின் இணக்கப்பாட்டுடன் அபிவிருத்தி | குறித்த நிதியை பிரதேச அபிவிருத்திக்கு |

| | | | |
|---|---|---|---|
| திட்டமிடல் 15 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 2 ஆம் பந்தி | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் காணப்பட்ட ரூபா 2,472,822 தொகை எவ்வித அபிவிருத்தி செயற்திட்டத்திற்கும் பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை. | செயற்பாடுகளுக்காக நிதியத்தை ஈடுபடுத்த நடவடிக்கை எடுப்பேன். | ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 02. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக மாநகர சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 59,242,057 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 64,769,012 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

**வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மாத்தளை தர்மபால மாவத்தையில் அமைந்துள்ள 11648 ஆன நான்கு மாடிகளுடன் கூடிய தற்போதய மக்கள் வங்கி அமைந்துள்ள கட்டிடத்திற்காக 2013 ஆம் ஆண்டின் போது பெற்றுக்கொண்ட மதிப்பீட்டு பெறுமதி அடிப்படையில் ரூபா 400 வீதம் வீதவரி அறவிடப்பட்டு வந்த போதும் தற்போதய மதிப்பீட்டு பெறுமதி அடிப்படையில் வீதவரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தொழில்நுட்ப உத்தியோகத்தர் அறிக்கையொன்று பெற்றுக்கொண்டு எதிர்வரும் நடவடிக்கைகளை எடுப்பதாக | தற்போதய மதிப்பீட்டு பெறுமதி அடிப்படையில் வீதவரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | வீதவரி அலகொன்றின் மொத்த நிலுவை தொகை ரூபா 15,000 இனை மிகைத்த 335 தனியார் ஆதனங்களிலிருந்து ரூபா 10,169,957 ஆன நிலுவை வீத வரியும் 43 அரச நிறுவனங்களிலிருந்து ரூபா 3,900,045 ஆன நிலுவை வீதவரி மீதியொன்றும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2021 நவம்பர் 12 ஆந் திகதி வரை முறையே ரூபா 6,695,597 மற்றும் ரூபா 3,837,103 தொகை மேலும் அறவிட வேண்டியிருந்தது. | நீண்டகாலமாக வீதவரி அறவிடுவதற்கு முடியாத தரப்பன்ர தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மாகாண சபையின் தலைமை செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2020 திசெம்பர் 31 ஆம் திகதியில் அறவிடப்பட வேண்டிய நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 8,381,103 தொகையும் முத்திரைக் கட்டணமாக ரூபா 29,210,210 ஆக இருந்தது. 2021 நவம்பர் 11 ஆந் திகதி வரை முறையே மொத்தம் ரூபா 4,126,117 தொகை மேலும் அறவிட வேண்டியிருந்தது. | அறவிடுவதற்கு வேண்டுகோள் கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.3 மிகை அறவீடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் பொறுப்பு வாய்ந்த தரப்பினருக்கு எதிராக என்னால் முன்னைய ஆண்டுகளின் போது விதிக்கப்பட்ட மிகை அறவீடுகளின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 536,781 தொகை அறவிட வேண்டியிருந்தது. | உள்ளுராட்சி மன்ற அமைச்சின் செயலாளருக்கு மேன்முறையீடு செய்யப்ப்டுள்ளது. | அமைச்சு செயலாளரின் தீர்மானங்களை பெற்று தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

நகர சபைகள் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

## 3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாத்தளை நந்தமித்தர ஏக்கநாயக்க சர்வதே சஹொக்கி விளையாட்டரங்கினை பயன்படுத்துதல் நிறுத்தப்பட்டிருக்கையில் மாதாந்தம் ரூபா 4,100 ஆன நிலையான கட்டடிமாக 2015 ஆம் ஆண்டு முதல் 2020 ஆகஸ்ட் வரையான காலப்பகுதியில் இலங்கை மின்சார சபைக்கு ரூபா 278,800 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | விளையாட்டரங்கினை மாநகர சபைக்கு சட்டரீதியாக கையளிப்பதற்கு கோவை மூலம் கண்டுபிடிக்க முடியாத 2015 ஆம் ஆண்டிலிருந்து விளையாட்டரங்கு விளையாட்டு செயற்பாடுகளுக்கு பயன்படுத்தப்பட்டுள்ளது. | 2015 ஆம் ஆண்டிலிருந்து விளையாட்டு செயற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டதாக சான்றுகள் வெளிப்படுத்தப்படாத துடன் மின்சார கட்டண கொடுப்பனவு தொடர்பாக தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும் |

### 3.2 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கொங்காவலை மற்றும் அம்பகஹமுல வர்த்தக தொகுதிகளில் 32 கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்காக ரூபா 230,502 செலவு செய்து 2020 சனவரி 13 ஆந் திகதி பத்திரிகை விளம்பரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. கடைகளுக்குரிய பழைய மதிப்பீடு 2019 மார்ச் 28 ஆந் திகதி முதல் அடுத்த 3 ஆண்டுகளுக்காக செல்லுபடியாகுமென அறிவிக்கப்பட்டிருக்கையில் அம்திப்பீட்டு அறக்கை இரத்துச் செய்யப்பட்டு மீண்டும் மதிப்பீடு செய்து கேள்வி கோருவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக பத்திரிகை விளம்பரத்திற்காக செலவிட்ட ரூபா 230,502 தொகை சபை நிதியத்திறகு நட்டமொன்றாக இருந்தது. | புதிய மதிப்பீடுகள் கிடைத்துள்ளதுடன் அதன் பிரகாரம் உடன்படிக்கை செய்யப்பட்டு குறித்த கடைகளிலிருந் குத்தகை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கவனமாகவும் உரிய கருத்துடனும் நடவடிக்கை எடுக்க வேண்டும். நட்டங்கள் தொடர்பாக தேவையான நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும். |

### 3.3 வெளிப்படையான முறைகேடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2014 நவம்பர் 12 ஆந் திகதிய 25/2014 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் தற்காலிக, அமைய (நாளாந்த) சமயாசமய , ஒப்பந்த அல்லது சலுகை அடிப்படையில் 8 ஆண்டுகளுக்கும் 19 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலமாக சேவையில் ஈடுபட்டு 2014 ஒக்தோபர் 24 ஆந் திகதி சேவை புரிந்த பதவிகளில் நிரந்தரமாக்கப்பட்டிருந்த 21 பேரினால் தவறான ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு போலியான கல்விச் சான்றிதழ்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | குறைந்த கல்வித்தகைமைகளை கொண்டிராத ஊழியர்களுக்காக பயிற்சி பாடநெறியொன்றை நடாத்தி அதன் மூலம் தகைமை பெறும் ஊழியர்கள் 8 ஆந் தரத்தில் சித்தியடைந்ததாக கருதி தலைமை செயலாளரின் அங்கீகாரம் பெற்று எதிர்வரும் நடவடிக்கை எடுக்கப்படும். | முறைகேடுகள் தொடர்பாக முறயான நடவடிக்கைகளை எடுத்தல் உரிய காலப்பகுதியில் தகைமைகளைப் பரீட்சித்து தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) மாநகர சபை அதிகார பிரதேசத்தில் தமது வதிவு 3 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக இருப்பதாக குறிப்பிட்டு வதிவு மற்றும் நடத்தை தொடர்பாக கிராம சேவையாளரால் வழங்கப்பட்டதாக தவறாக தயாரிக்கப்பட போலி வதிவுச் சான்றிதழ் சமர்ப்பித்திருந்த அதிகார பிரதேசத்தில் குடியிருக்கும் நான்கு பேருக்கு சாரதி பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தது. | ஆரம்ப புலனாய்வு மேற்கொள்ளப்பட்டு வழங்கப்பட்டிருந்த நியமங்கள் செல்லுபடியாக்கப்பட்டிருந்ததுடன் பொலிஸ் மூலம் புலனாய்வொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக | முறைகேடுகள் மேற்கொண்ட மற்றும் மேற்கொள்வதற்கு ஒத்துழைத்த தரப்பினர் இனங்காணப்பட்டு தெவையான நடவடிக்கைகளை பின்பற்ற வேண்டும். |

## 3.4 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2009 ஆம் ஆண்டு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருந்த 14 கடைகளின் மூலம் மொத்தம் ரூபா. 3,389,297 ஆகிய ஒரே தடவையில் செலுத்தும் தொகையையும் அதனுடன் தொடர்பான ரூபா. 22,880,827 ஆகிய தண்டப்பணத் தொகையையும் அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஒரே தடவையில் செலுத்தும் தொகை மற்றும் தண்டப் பணத்தை செலுத்தாத குத்தகையாளர்கள் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுப்பேன். | நிலுவைகளை அறவீடு செய்வதற்கான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2018ஆம் ஆண்டு வாகன நிறுத்தல் கட்டணம் அறவிடுவதற்காக தரகு அடிப்படையில் இணைத்துக் கொள்ளப்பட்டிருந்த 40 வாகனக் காப்பாளர்களுக்காக 2019 ஆம் ஆண்டிற்காக சபையினால் சேகரிக்கப்பட்டிருந்த ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர்களின் பங்களிப்புத் தொகையாகிய ரூபா. 762,615 தொகை 2020 ஆகஸ்ட் 18 ஆம் திகதி வரை பொது வைப்புகளில் வைக்கப்பட்டிருந்தது. தற்பொழுது அவ்வூழியர்களது சேவைக்காலம் முடிவடைந்துள்ள நிலையில், அத் தொகைகளை அவர்களுக்கு மீள வழங்குவதற்கான நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஊழியர்களுக்கு வழங்குவதற்கான நடவடிக்கை எடுப்பேன். | ஊழியர்களுக்கு குறித்த தொகை மீள வழங்கப்படல் வேண்டும். |
| (இ) | சபைக்குச் சொந்தமான சக்சன் பார்க் எனும் காணி 1996 மே 29 ஆம் திகதி முதல் நீண்டகால வாடகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தது. 2011 ஏப்ரல் 01 ஆம் திகதியின் பின்னர் ஒப்பந்தம் புதுப்பிக்கப்படாதிருந்ததுடன், குறித்த காணியின் உரிமையினை மீளப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்காது காணியினை சட்டவிரோத அடிப்படையில் பயன்படுத்துவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது. 2016 ஏப்ரல் 01 ஆம் திகதி முதல் 2021 மார்ச் 31 வரையிலான | மதிப்பீட்டு அறிக்கையினைப் பெற்றுத்தருமாறு பிரதான மதிப்பீட்டாளருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. சனாதிபதி அவர்களின் எழுத்து மூலமான அனுமதியைப் பெற்றுக் | மதிப்பீட்டு அறிக்கையினைப் பெற்று ஒப்பந்தத்தினைப் புதுப்பித்து சட்டரீதியாக செயற்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காலப்பகுதிக்கான ரூபா. 135,000 ஆகிய வாடகைத் தொகையினை அறவிடுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2016 மார்ச் 31 ஆம் திகதியுடன் ஆரம்பமாகும் 05 வருடங்களுக்காக குறித்த காணியை வாடகைக்கு விடுவதற்காக இதுவரையில் புதிய மதிப்பீட்டு அறிக்கை பெற்றுக் கொள்ளப்படவில்லை. | கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | |
| (ஈ) | கொங்காவல புதிய பேரூந்து தரிப்பிடத்தில் தனியார் பேரூந்துகளிடமிருந்து ரூபா. 100 ஆகிய நாளாந்தக் கொடுப்பனவொன்றினை அறவிடுவதற்கு பொதுச் சபை தீர்மாணம் மேற்கொண்டிருந்த போதும், 2020 ஆகஸ்ட் 17 ஆம் திகதி வரை அத் தீர்மாணம் செயற்படுத்தப்படாதிருந்ததன் காரணமாக, 2020 மே முதல் ஆகஸ்ட் வரையிலான காலப்பகுதியினுள் மாத்திரம் பேரூந்துகளின் மூலம் சபைக்கு அறவீடு செய்யக்கூடியதாக இருந்த சுமார் ரூபா. 1,291,500 ஆகிய வருமானத் தொகை இழக்கப்பட்டிருந்தது. | வாகன கட்டுப்பாட்டாளர்களது நியமனம் இரத்துச் செய்யப்பட்டதன் காரணமாக கட்டணம் அறவிடுவதனை முறையாக மேற்கொள்ள முடியாது போனது. | வருமானத்தினை சேகரித்துக் கொள்வதற்கான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | சட்ட விரோதமாக நிர்மாணிக்கப்பட்டு குடியமர்ந்துள்ள அல்லது வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்ற இரண்டு கட்டடங்கள் சம்பந்தமாக மீளாய்வாண்டில் வருமான பரிசோதகர்கள் அறிக்கையிட்டு, இணக்கச் சான்றிதழ் பெற்றுக்கொள்ளாமை தொடர்பில் நாளொன்றிற்கு ரூபா. 250 வீதம் அபராதத் தொகையினை அறவீடு செய்வதற்கு பரிந்துரை செய்யப்பட்டிருந்த போதும், அது தொடர்பான முறையான வழிமுறைகள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. | குறித்த கட்டடங்களை சட்ட விரோத நிர்மாணிப்புகளாகக் கருதி எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பேன். | சட்ட விரோத நிர்மாணிப்புகள் தொடர்பில் சட்டரீதியான வழிமுறைகள் பின்பற்றப்படல் வேண்டும். |
| (ஊ) | 32 சந்தர்ப்பங்களுடன் தொடர்பான கடைகளின் மூலம் பெறப்பட்டிருந்த ஒரே தடவையில் செலுத்தும் தொகை மற்றும் கைமாற்றல் கட்டண அறவீடுகளான ரூபா. 1,866,234 ஆகிய தொகை வருமானமாக கணக்கிடப்படாது நீண்ட காலமாக பொது வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டிருந்தது. | வருமானத்தில் கணக்கிடுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பேன். | வருமானத்தில் கணக்கிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) | வாரியபொலவத்த கழிவு ஒதுக்கும் நிலையத்திலிருந்து வழிந்து செல்கின்ற கழிவு நீர் மழை நாட்களில் அதற்கு அருகாமையில் அமைந்துள்ள சுது கங்கையில் கலப்பது கட்டுப்படுத்தப்பட்டிருக்கவில்லை. வாரியபொலவத்த கழிவு ஒதுக்கும் நிலையத்தில் கழிவுகளை ஒதுக்குவது தொடர்பில் உயர் நீதிமன்றத்தில் ஒரு | காணியைக் கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், ஏனைய விடயங்கள் தொடர்பில் விரைவான | சுற்றாடலுக்கான பாதிப்புக்களை குறைத்து முறையான கழிவு முகாமைத்துவத்தினை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வழக்கு தொடுக்கப்பட்டுள்ளதுடன் வழக்குக் கட்டணமாக மீளாய்வாண்டின் இறுதித் திகதி வரை ரூபா. 5,639,975 ஆகிய தொகை செலவிடப்பட்டிருந்தது. அதேவேளை குறித்த காணி கொள்வனவு செய்யப்பட்டிருக்காத அதேவேளை சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரமும் பெறப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கைகளை எடுப்பேன் | |
| (ஏ) | நகர முதல்வரின் பயன்பாட்டிற்காக ரூபா. 10,975,000 செலவில் 2019 ஆம் ஆண்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்த கெப் வண்டியின் எரிபொருள் விரயம் 01 லீற்றருக்கு 09 கிலோ மீற்றர் பயணிக்க முடியுமென பொறியியல் சார் சான்றிதழ் பெறப்பட்டிருந்த போதும், குறித்த கெப் வண்டி தொடர்பான ஓட்டக் குறிப்புகளுக்கமைவாக லீற்றரொன்றிற்கு 5.26 தொடக்கம் 7.17 கிலோ மீற்றருக்கு இடைப்பட்ட தூரமே பயணிக்க முடியும் எனக் குறிப்பிட்டு 2019 டிசம்பர் 19 ஆம் திகதி முதல் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட 2020 ஜுன் 30 வரையிலான காலப்பகுதியினுள் 15,+740 கிலோமீற்றர் பயணித்து 869 லீற்றர் எரிபொருளுக்காக ரூபா. 114,708 கூடுதலாக செலவிடப்பட்டிருந்தது. | முறைகேடாகப் பயன்படுத்தப்பட்ட எரிபொருளுக்கான தொகையினை அறவீடு செய்வதற்கு சட்ட ரீதியாக நடவடிக்கை எடுப்பேன். | குறித்த தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.5 செயற்பாட்டு வினைத்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | விஹாரை வீதிக்கு சமாந்திரமாக அம்பகஹஹமுல மததியில் அமைந்துள்ள பழைய வியாபார கடை தொகுதியன் மேல் மாடியில் 776 சதுர அடி கூட்டுத்தொகையான 5 கடகள் மூடப்பட்டிருநன. அவ்வர்தத்க தொகுதியின் 30 ∴ஆம் இலக்க கடை உரிமையாளர் 161 சதுர அடி அளவிலான பகுதியொன்றை அனுமதியின்றி நிர்மாணித்திருந்ததுடன், வர்த்தக தொகுதியின் கீழ் மாடியின் 01 ஆம் இலக்க கடை மற்றும் படிக்களுக்கு இடையே 63 சதுர அடி அளவிலான வெற்று பகுதியில் அனுமதியின்றி விற்பனை கூடமொன்றை நடாத்திச் செல்லப்படுகின்றது. | எதிர்காலத்தில் இதன் அனைத்து குறைபாடுகளையும் சீராக்க நடவடிக்கை எடுப்பேன். | சொத்துக்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | கூம்பியன்கொட பிரதேசத்தில் பிரதான வீதிக்கு அருகில் காணப்படுகின்ற அனுமதியற்ற இரண்டு நிர்மாணங்கள் தொடர்பாக எவ்வித நடவடிக்கையொன்றும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிர்மாணத்தை அனுமதியின்றிய நிர்மாணமாக கருததி நடவடிக்கை எடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுப்பேன். | அத்துமீறிய நிர்மாணங்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.6 பெறுகை முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நீண்ட காலமாகக் கைவிடப்பட்டுள்ள 32 கடைகள் மற்றும் 2 பால் சேகரிப்பு நிலையங்களை வாடகைக்கு விடுவதற்கான ரூபா. 230,502 செலவிடப்பட்டு 2020 ஜனவரி 16 ஆம் திகதி விலைமனு கோரப்பட்டிருந்ததுடன், 04 கடைகளுக்கும் ஒரு பால் சேகரிப்பு நிலையத்திற்குமான விலைமனுக்கள் கிடைக்கப்பெற்றிருந்தன. இதற்காக 2020 பெப்ரவரி 18 ஆம் திகதி கேள்வி தீர்மானங்கள் வழங்கப்பட்டதன் பின்னர் கடைகளை கையளிப்பதற்கான சந்தர்ப்பம் காணப்பட்ட போதும், 2020 ஆகஸ்ட் 31 ஆம் திகதி வரை ஒப்பந்தங்களை கைச்சாத்திட்டு கடைகளை கையளிக்காததன் காரணமாக, 2020 மார்ச் 01 தொடக்கம் 2020 ஆகஸ்ட் 31 ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்காக மாத்திரம் குறைந்த பட்சம் ரூபா. 1,145,500 வருமானத்தினைப் பெறக்கூடிய சந்தர்ப்பம் தவறவிடப்பட்டிருந்தது. | புழைய மதிப்பீட்டின் படி நிலுவைகளை அறவீடு செய்வதற்கும் புதிய மதிப்பீட்டின் படி கடைகளின் வாடகையினை அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுப்பேன். | முறையான விலைமனுக் கோரல் வழிமுறைகளைப் பின்பற்றி அவசரமாக குத்தகையாளர்களைத் தெரிவு செய்து குறித்த காலத்தினுள் ஒப்பந்தங்களைக் கைச்சாத்திட்டு தேவையான விடயங்களை மேற்கொள்வதற்கான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | பொருள் கொள்வனவின் போது மாநகர சபையினால் அங்கீகரிக்கப்பட்ட இடைக்காலச் சட்டத்தின் பிரிவு V இன் II(இ) பிரகாரம் கிடைக்கப்பெற்றிருந்த குறைந்த விலைமனுக்களை புறக்கணித்து கூடிய விலைமனுவின் அடிப்படையில் பொருட்களை கொள்வனவு செய்வதாயின் அதற்கான காரணங்களைக் குறிப்பிட்டு பரிந்துரைகளை சமர்ப்பித்தல் வேண்டும். எனினும் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட 06 கொள்வனவு சந்தர்ப்பங்களின் போது அவ்வாறான காரணங்கள் குறிப்பிடப்படாது ரூபா. 517,578 பெறுமதியான பொருட்கள் கூடிய விலைகளின் அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த அதேவேளை, இதனடிப்படையில் குறைந்த விலைகளை தாண்டி செலுத்தப்பட்டிருந்த தொகை ரூபா. 149,472 ஆகவிருந்தது. | இது தொடர்பாக நிதி செயற்குழு மற்றும் பொதுச் சபை ஆகியவற்றுக்கு அறிவிப்பதற்கும், குறித்த தகவல்கள் மற்றும் விளக்கங்களை வழங்குவதற்கும் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பேன். | இடைக்காலச் சட்டத்தின் விதிமுறை களுக்கேற்ப நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.7. ஒப்பந்த நிர்வாகத்திலான குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நூலக சேவை சபையின் பரிந்துரைகளின் அடிப்படையில் மூன்றாம் தர நூலகமாக நடாத்திச் செல்வதற்கு பொருத்தமான எந்தவித வசதிகளும் இல்லாது நமகாடா ஒய்வு விடுதிக் கட்டடத்தின் இரண்டு அறைகளில் நூலகத்தினை நடாத்திச் சென்றிருந்த அதேவேளை பொருத்தமான ஒரு நூலகத்திற்கான தேவை இருந்த போதும் அதில் கவனம் செலுத்தாது ரூபா. 3,402,397 செலவில் தரமில்லாத ஒரு வாசிப்பு மண்டபம் அமைக்கப்பட்டிருந்தது. இதற்கான சாத்திய வள ஆய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | முன்னாள் நகர பொறியியலாளர் மற்றும் முன்னாள் நகர முதல்வரின் அறிவுறுத்தல் களுக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | தேவைகளை இனங்கண்டு, முறையான திட்டமிடலின் அடிப்படையில், சாத்திய வள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு திட்டங்கள் அமுல்படுத்தப்படல் வேண்டும். |
| (ஆ) | பிள்ளையார் கோவில் வீதியில் உள்ள காணில் நீர் வழிந்தோடும் சரிவினை சரியாக இனங்கண்டு திட்டமிட்டு 470 மீற்றர் தூரத்திற்கு கொங்ரீட் இட்டு நிறைவு செய்வதற்காக ஒப்பந்தம் கையளிக்கப்பட்டு 2020 ஜுலை 22 ஆம் திகதி முதல் கட்ட கொடுப்பனவாக ரூபா. 1,287,279 செலுத்தப்பட்டிருந்தது. நிர்மாண வேலைகள் மேற் கொள்ளப்படும் போது காணின் ஆரம்பப் புள்ளியிலிருந்து சுமார் 100 மீற்றர் தூரத்தில் நிலத்தின் மட்டம் ஆரம்பப் பகுதியை விடவும் உயரமாகக் காணப்படுவதாகவும், நீர் ஒழுங்காக வழிந்தோடுவது தடைப்படுகின்றது எனவும் இனங்காணப்பட்டிருந்தது. இதன் காரணமாக 2020 செப்டம்பர் 24 ஆம் திகதி பரிசோதனைத் தினமாகும் பொழுது நிர்மாண நடவடிக்கைகள் இடைநடுவில் கைவிடப்பட்டிருந்ததை அவதானிக்க முடிந்தது. | பொது மக்களின் எதிர்ப்பு காரணமாக நிர்மாண நடவடிக்கைகளை இடைநடுவில் கைவிட வேண்டி ஏற்பட்டது. | முறையான ஆய்வின் பின்னர், தொழில்நுட்ப மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு, தேவைகளின் அடிப்படையில் திட்டங்களை நடைமுறைப்படுத்து வதற்கான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | அம்பகமுவ பேரூந்துத் தரிப்பிடத்தின் கீழ் மாடி மற்றும் முதலாம் மாடிகளில் அமைந்துள்ள 29 கடைகளில் 22 கடைகள் 18 வருட காலமாக மூடப்பட்டு பயன்பாடற்ற நிலையில் கைவிடப்பட்டுள்ள நிலையில் தேவையை சரியாக இனங்காணாது சாத்திய வள ஆய்வு மேற்கொள்ளப்படாது ரூபா. 10,794,600 செலவிடப்பட்டு இரண்டாம் மாடி | மேலதிக வகுப்புகள் நடாத்தல் போன்ற தேவைகளுக்காக பயன்படுத்துவதற்காக முன்னாள் நகர முதல்வரின் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன், | தேவைகளை சரியாக இனங்கண்டு, சாத்திய வள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு திட்டங்களை நடைமுறைப்படுத்து வதற்கான நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| அமைக்கப்பட்டிருந்தது. முதலாம் மாடியின் சுவர்கள் மற்றும் உத்திரம் (Beam) ஆகியவற்றில் வெடிப்பு ஏற்பட்டு கட்டடம் உறுதியற்ற நிலையில் காணப்பட்ட நிலையில் அதற்கு மேலால் இரண்டாம் மாடி அமைக்கப்பட்டிருந்தது.<br>நிர்மாணிக்கப்பட்ட இரண்டாம் மாடியின் மேல் இடப்பட்ட கூரையானது சரியான தரத்தின் அடிப்படையில் காணப்படாத அதேவேளை, புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கட்டடத்தின் ஒரு வரிசைக்கு 03 கொங்ரீட் தூண்கள் எனும் அடிப்படையில் 19 வரிசைகளுக்கு 57 தூண்களை நிர்மாணிப்பதற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதும், ஒரு வரிசைக்கு 02 தூண்கள் வீதம் 18 வரிகளுக்காக 36 தூண்கள் மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டிருந்தன.<br>இதனடிப்படையில் முறையற்ற விதத்தில் மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | திட்டமிடல் குழுவின் அனுமதிக்காக எதிர்காலத்தில் முன்வைப்பேன். | எடுத்தல் வேண்டும். |